**கவனிக்க.**-*2020.03.20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) மற்றும் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2169 - 2020 මාර්තු මස 27 වැනි සිකුරාදා - 2020.03.27

*2169 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 102 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

101 - B 082021 - 353 (2020/03)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*சபரகமுவ மாகாண சபையின் இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள வெலிகெபொல பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் அனுராத ஜயகொடி ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ், முன்னாள் கௌரவ சனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன அவர்களால் 1987.03.27 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள இரத்தினபுரி 5960 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான ரன்வல தலகஸ்கந்த வியாபாரி எனும் முகவரியில் வசிக்கும் பள்ளிலகமஎதிராலலாகே பொடிஹாமி என்பவருக்குக் கையளிக்கப்பட்டு, இரத்தினபுரி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 9/127 ஆம் இலக்கத்தின்கீழ் 1987.12.07 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2020.04.20 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*இரத்தினபுரி நிர்வாக மாவட்டத்தின் வெலிகெபொல பிரதேச செயலாளர் பிரிவின் கதவெல்பற்றில்/நடு கோறளையிலுள்ள பதுன்னை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தலகஸ்கந்த எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், .................................... நில அளவையாளர் அத்தியட்சகர் என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு ........................ ஆம் இலக்க வெளிக்களத் தாளில் ................................. இரேகை வரைதலில் அ. க. சி. 678 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 0.806 ஹெக்டெயர்/ஏக்கர் ................... றூட் ................... பேர்ச்சஸ் .................... விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான தலகஸ்கந்த ஹென்யாய அரச காணித்துண்டு "தொல தெக்கட்ட அதர மூகலான" -*

வடக்கு : *காணித்துண்டு இல. த. அ. 50 ;*
கிழக்கு : *காணித்துண்டு இல. த. அ. 65 ;*
தெற்கு : *காணித்துண்டு இல. த. அ. 48.65 ;*
மேற்கு : *காணித்துண்டு இல. த. அ. 48.50.*

*அனுராத ஜயகொடி,*
*பிரதேச செயலாளர்.*

*பிரதேச செயலகம்,*
*வெலிகெபொல,*
*2019, நவெம்பர் 26.*

*03-994/1*

---

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*சபரகமுவ மாகாண சபையின் இரத்தினபுரி மாவட்டத்தின் எலபாத்த பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடையிலான) எஸ். ஏ. தில்ருக் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ்,அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் 1982 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள இர/பிர/ 1134 ஆம் இலக்கமுடைய அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான ஹங்கமுவ, கெக்குலையில் வதியும் துரயின்லாகே பாலகிரா என்பவரிடம் வழங்கப்பட்டு, இரத்தினபுரி மாவட்ட காணிப்பதிவகத்தில் ஜயபூமி கா. ஆபி. 1/37 ஆம் இலக்கத்தின் கீழ் 1984.10.25 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள, கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு அடுத்து வருபவர் ஒருவராவதற்கு சட்ட ரீதியில் உரிமையுள்ளவர்கள் எவரும் இல்லாதமையினால் அல்லது உரிமையுள்ள ஒருவர் இருந்தபோதிலும் அவர் அடுத்து வருபவர் ஒருவராவதற்கு விருப்பம் தெரிவிக்காமையின் காரணமாக அடுத்து வருபவர் ஒருவராக நியமனமாவதற்கு எவரும் இல்லையென அறிக்கையிடப்பட்டுள்ளமையினால் மேற்கூறிய அளிப்புப் பத்திரம் மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறிவிக்கின்றேன். இவ்விடயம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் அவற்றை 2020.04.20 ஆந் திகதிக்கு முன் எழுத்து மூலமாக எனக்கு அறிவித்தல் வேண்டும்.*

**அட்டவணை**

இரத்தினபுரி நிர்வாக மாவட்டத்தில், எலபாத்த பிரதேச செயலகப் பிரிவில் பல்லே பத்துவையில் ஹங்கமுவ கிராம அலுவலர் பிரிவில் கெக்குல என்னும் கிராமத்தில் அமைந்துள்ள மு. கி. ப. இல. 91 இல் லொட் இல. 52 இன் ஒரு பகுதி எனக் காட்டப்பட்டுள்ள அளவில் 01 (ஓர்) ஏக்கர் 14 (பதினான்கு) பேர்ச் விஸ்தீரணமுடைய கீழ்க்காட்டப்பட்டுள்ள எல்லைகளுக்குள் அமைந்துள்ள லபுகல ஹேன என்னும் அரசாங்கக் காணி (தரைக்காணி)-

வடக்கு : காணித்துண்டு இல. 49 ;
கிழக்கு : காணித்துண்டு இல. 2பி மற்றும் 2 டீ ;
தெற்கு : காணித்துண்டு இல. 53 ;
மேற்கு : காணித்துண்டு இல. 50.

எஸ். ஏ. தில்ருக்,
பிரதேச செயலாளர்,
எலபாத்த.

எலபாத்த பிரதேச செயலகம்,
எலபாத்த.

03-994/2

---

இணைப்பு 9

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புகளை 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்**

அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவுக்கேற்ப 1989 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதிய தொம்வே கம்மான இல் வசிக்கும் தாலதுரையலாகே டிங்கியா என்பவருக்கு இர/பிர/7996 ஆம் இலக்க அளிப்பின் கீழ் பராதீனம் செய்யப்பட்டு இரத்தினபுரி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1990.07.08 ஆந் திகதிய 5/646 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள, கீழ்க்காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள காணியை, சட்டரீதியான பின்னுரிமை வாரிசு இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ளதால்/இருக்கும் பின்னுரிமை வாரிசு கோர விரும்பவில்லை என சபரகமுவ மாகாண சபைக்குட்பட்ட நிவிதிகல பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் சமரசேகர முதியன்சலாகே தர்சன சமிந்த அமரசேகர ஆகிய நான், இத்தால் அறியத்தருகிறேன். ஆதலால் கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின்கீழ் மேற்கூறிய அளிப்பை இரத்துச்செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2020.04.20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்திலான சமர்ப்பணம் மூலம் எனக்குத் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 14 ஆம் இலக்க வெளிக்களத்தாளின் பிரகாரம் ................ அவர்களினால் தயாரிக்கப்பட்ட ............................. ஆம் இலக்கத் துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து அரச நில அளவையாளரினால் நிர்மாணிக்கப்பட்ட 23 ஆம் இலக்க பிரதிப்படத்தில் காணித்துண்டு இலக்கம் 284 எனக் காட்டப்பட்டுள்ளதும், இரத்தினபுரி நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட நிவிதிகல பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த ..................... பற்று/கோரளையிலுள்ள நொரகல்ல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தொம்வே கம்மான எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 0.102 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணி. இதன் எல்லைகள் வருமாறு :

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 283 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 283, 286 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 286, 338 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 285.

எஸ். எம். டீ. சீ. சமரசேகர,
பிரதேச செயலாளர்,
நிவித்திகல.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
நிவிதிகல,
2020, பெப்புருவரி 06.

03-994/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.